16.11.2022

அசல் வழக்கு எண்: 245/2014

வா.சா.2 சாட்சி சுப்பாரெட்டி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் எந்த ஊரில் குடியிருந்து வருகிறேன் என்றால் தற்போது விருதுநகரில் குடியிருந்து வருகிறேன். என்ன வேலை செய்கிறேன் என்றால் தமிழ்நாடு அரசு போக்குவரத்தில் நடத்துனராக 25 ஆண்டுகளாக வேலை பார்த்து 2017 ம் ஆண்டு ஓய்வு பெற்றுவிட்டேன். வேலை பார்த்த காலத்திலும் விருதுநகரில் தான் குடியிருந்தேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயர் என்ன என்றால் கோபாலகிருஷ்ணரெட்டி ஆகும். இந்த வழக்கை நான் தாக்கல் செய்தபோதும் எனது தகப்பனார் பெயர் கோபாலகிருஷ்ணரெட்டி என்று சொல்லியுள்ளேன் என்றால் இந்த வழக்கை நான் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கினுடைய பிராதில் நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. எப்போது கையொப்பம் செய்தேன் என்றால் 2004 ம் ஆண்டு அல்லது 2014 ம் ஆண்டு கையெழுத்து செய்தேனா என்று எனக்கு ஞாபகம் இல்லை. எனது தாயார் பெயர் என்ன என்றால் சின்னக்கம்மா ஆகும்.

நான் என்ன படித்துள்ளேன் என்றால் பழைய SSLC படித்துள்ளேன். எந்த வருடம் படித்தேன் என்றால் 1975 ம் ஆண்டா அல்லது 1976 ஆண்டா என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் பள்ளியில் படித்த சான்றிதழிலும் எனது தகப்பனார் பெயர் கோபாலகிருஷ்ணரெட்டி என்றும் தாயார் பெயர் சின்னக்கம்மா என்று தான் உள்ளது என்றால் சரிதான். எந்த வருடம் வேலைக்கு சேர்ந்தேன் என்றால் 1992 ம் ஆண்டு வேலைக்கு சேர்ந்தேன். நான் வேலைக்கு சேர்ந்தபோதும் எனது சர்விஸ் ரிஜீஸ்டரில் எனது தகப்பனார் பெயர் கோபாலகிருஷ்ணரெட்டி என்றும் தாயார் பெயர்

சின்னக்கம்மா என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தற்போது வரை எனது சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களிலும் எனது தகப்பனார் பெயர் கோபாலகிருஷ்ணரெட்டி என்றும் தாயார் பெயர் சின்னக்கம்மா என்றும் தான் உள்ளது என்றால் சரிதான்.

நிரூபண வாக்குமூலம் தயார் செய்வதற்கு தகவல் சொன்னது யார் என்றால் நான் தான் சொன்னேன். நிரூபண வாக்குமூலம் என்ன என்று தெரியுமா என்றால் தெரியாது. நிரூபண வாக்குமூலம் யார் தாக்கல் செய்துள்ளார் என்ற விபரமும், என்ன விலாசம் கூறி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரமும் என்ன சங்கதிகளை கூறி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்று தெரியுமா என்றால் சித்திவிநாயகர் கோயிலுக்கு பாத்தியப்பட்ட இடம் எங்களுக்குதான் சொந்தம் என்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சித்திவிநாயகர் கோயிலுக்கு சொந்தமான நிலத்தை பொறுத்துதான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த விபரத்தை தான் எனது வழக்கறிஞரிடம் கூறினேன் என்றால் சரிதான்.

வழக்கு விபரம் குறித்து கூற யார் யார் சென்றோம் என்றால் நானும் ராதாகிருஷ்ணன் என்பவரும் சென்றோம். நாங்கள் 2 பேரும் எனது வழக்கறிஞரிடம் சென்று சித்திவிநாயகர் கோயிலுக்கு பாத்தியப்பட்ட நிலம் சம்பந்தமாக வழக்கு போடவேண்டும் என்று சொன்னோம் என்றால் சரிதான். மேற்கண்ட நிலம் சம்பந்தமாகத்தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராதில் நாங்கள் இருவரும் மட்டும் கையொப்பம் செய்தோம் என்றால் எங்கள் இருவருடன் சேர்ந்து இன்னும் நான்கு நபர்கள் கையொப்பம் செய்தார்கள். 6 பேரும் படித்து பார்த்து அதில் உள்ள விபரம் சரியாக இருந்ததால் தான் கையொப்பம் செய்தோம் என்றால்

சரிதான்.

ராதாகிருஷ்ணன் என்பவர் எனக்கு ஆதரவாக ஒரு பத்திரம் தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அந்த பத்திரத்தின் விபரம் எனக்கு தெரியுமா என்றாலும் தற்போது வரை எனக்கு தெரியாது. 1978 ம் ஆண்டு எனக்கு எத்தனை வயது என்றால் நான் 1959 ம் ஆண்டு பிறந்தேன். 1978 ல் SSLC முடித்துவிட்டேன் என்றால் சரிதான். 1978 ம் ஆண்டு எனக்கு சம்பந்தப்பட்ட பத்திரம் எதுவும் உள்ளதா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 1978 ல் எனது பெயரில் வேறு எதாவது பத்திரம் பதியப்பட்டதா என்றால் 1978 ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டதாக எனக்கு தாமதமாக தெரியவந்தது. எப்போது எனக்கு தெரியவந்தது என்றால் 1978 ம் ஆண்டிலிருந்து சுமார் 4 அல்லது 5 வருடங்களுக்கு பிறகு தெரியவந்தது. அது என்ன பத்திரம் என்றால் பசுபதியம்மாள் என்பவர் என்னை சுவிகார புத்திரனாக எடுத்த பத்திரமாகும்.

அந்த பத்திரத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். பத்திரத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். எப்போது படித்து பார்த்தேன் என்றால் வழக்கை தாக்கல் செய்த சமயத்தில் படித்து பார்த்தேன். அந்த பத்திரம் பதிவு செய்யப்பட்ட பத்திரமா அல்லது பதிவு செய்யப்படாத பத்திரமா என்றால் பதிவு செய்யப்பட்ட பத்திரம் ஆகும். அந்த பத்திரத்தில் என்ன எழுதியுள்ளது என்றால் பசுபதியம்மாளுக்கு குழந்தை இல்லாததால் என்னை சுவிகாரபுத்திரனாக எடுத்ததாக சொல்லப்பட்டிருந்தது. அந்த பத்திரத்தில் யார் யார் கையொப்பம் செய்திருந்தார்கள் என்றால் எனது தகப்பனார் கோபாலகிருஷ்ணரெட்டி தாயார் சின்னக்கம்மா மற்றும் எனது பாட்டி லெட்சுமியம்மாள் ஆகியோர்கள் கையொப்பம் செய்திருந்தார்கள். யார் பத்திரத்தை எழுதினார்கள், யார் சாட்சி கையெழுத்து செய்திருந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால்

சரிதான்.

பசுபதியம்மாளின் கணவர் பெயர் ராமசாமிரெட்டியார் என்றால் சரிதான். பத்திரத்தை எழுதிய காலத்தில் ராமசாமிரெட்டியார் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். எனது பெற்றோர் உயிருடன் இருக்கிறார்களா என்றால் எது தாயார் மட்டும் உயிருடன் உள்ளார். அவரை யார் பராமரித்து வருகிறார்கள் என்றால் நானும் எனது சகோதரர்களும் சேர்ந்து பராமரித்து வருகிறோம்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி வா.சா.2 குறுக்கு விசாரணை வேறு ஒரு நாளைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)